**பலாங்கொடை பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலாங்கொடை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 2,440,866 இற்கான நிர்மாண வேலைகளின் பெறுமதி நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கிவல்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் அடங்கியுள்ள சபைக்குச் சொந்தமான 12 காணிகள் தொடர்பாக உரிய பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 2013 ஆண்டு முதல் பயன்படுத்தப்படும் தகனசாலையின் கிரயம் ரூபா 8,391,146 தொகையான கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) பகிர்தளிப்பதற்காக கொள்வனவு செய்திருந்த தொக்குப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 75,350 தொகைக்கான சீ.எப்.எல் மின்குமிழ்கள் மற்றும் பிளாஸ்டிக் கதிரைகள் இறுதி இருப்பு என கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆண்டு முதல் பெற வேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 14,400 தொகையினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமான வதிவதற்காக வாடகைக்கு கொடுத்திருந்த யகஹலு முகலான பிரதேசத்தில் 19 துண்டுக் காணிகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 38,200 தொகையினை அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய ரூபா 2016 ஏப்ரல் 07 திகதி வரை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 247,767 தொகையான பெறுமதி கூட்டிய வரி மற்றும் மூன்று சதவீத தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பன கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 07 திகதி வரை அனுப்பப்படாமல் பலவின வைப்புக் கணக்கில் தடுத்து வைத்திருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டமையால் ரூபா 1,949,259 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திரமான சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்ளுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) சப்ரகமுவ மாகாண மாகாண சபை நிதி விதிக்கோவை | |
| (i) விதி 261.2.7 | 1992 ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 472,884 தொகைக்கான துணைக் கட்டுநிதிகள் கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 07 திகதி வரை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) விதி 283 | கூட்டுத்தொகை ரூபா 8,999 தொகைக்கான காலங் கடந்த 8 காசோலைகள் தொடர்பாக மேற்கூறிய விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி நிருவாக விதி) | |
| (i) விதி 214 | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 415,370 தொகை பெறுமதியான களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக மெய்மையாய்தல் சபை ஒன்று நியமனம் செய்து சான்றுறுதி செய்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 தேசிய பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1(8) | பிரதேச சபையினால் குறைந்த அளவு 03 வருட காலத்திற்கான உத்தேச பெறுகைகள் விடயங்கள் அடங்கிய பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான ரூபா 532,580 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் கணனி துணைக் கருவிகள் பதிவேடு ஒன்றில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | 2015 ஜுலை 23 திகதிய 07/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | சபையில் கடமையாற்றும் இரண்டு ஊழியர்கள் தொடர்பாக ரூபா 77,700 பங்களிப்புத் தொகை அரச சேவை சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யாமல் இலங்கை மத்திய வங்கியால் கட்டுப்படுத்தும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. |
| (ஊ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | 52 பேர்களைக் கொண்ட பதவியணி ஒன்றினைக் கொண்டிருந்த போதிலும் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் என்பவற்றை உறுதிப்படுத்து வதற்காக விரல் அடையாளம் பதிக்கும் இயந்திரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,579,926 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 2,657,594 தொகையாகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 922,332 இற்கான முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 6,322,668 இனால் அதிகரித்தலும் பிரயாணச் செலவுகள் மற்றும் வழங்கல்கள் உபகரணங்களின் செலவு ரூபா 2,437,278 இனை குறைந்திருந்தல் மேற்கூறிய நிதி விளைவுகள் அதிகரிப்பிற்கு முக்கியமாக காரணமாக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

முன்னைய ஆண்டிற்கான நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி ரூபா 239,695 இற்கான மீதியினால் ரூபா 207,789 தொகை அதாவது 87 சதவீதம் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.2 வாடகை

முன்னைய ஆண்டு தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 31,115 ஏக்கர் வரியில் ரூபா.25,871 அதாவது 83 சதவீதம் மற்றும் மீளாய்வாண்டின் பாதீட்டு ஏக்கர் வரி ரூபா 27,707 தொகையினை ரூபா 13,555 தொகை அதாவது 49 சதவீதத்தினை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2014 ஆண்டு செப்தெம்பர் முதல் 2015 ஆண்டின் திசெம்பர் வரை பெற வேண்டிய ரூபா 5,280,100 இற்கான முத்திரைக் கட்டணம் சப்ரகமுவ மாகாண சபை பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 07 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை சபைக்கு கிடைத்திருந்த 06 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக அவற்றின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

தகனசாலை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த கம்பனியினால் 2013 ஏப்ரல் 09 திகதி சபைக்கு சமர்ப்பித்திருந்த ரூபா 4,194,270 தொகைக்கான இறுதி பில் பத்திரங்கள் பரிசோதனை மேற்கொண்டு கொடுப்பனவு செய்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 07 திகதி வரை உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையினால் கொடகும்புர கிராம உத்தியோகத்தர் அதிகாரப் பிரதேசத்தில் அனிச்சியாவத்த ஹேன என்ற இடத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவ மத்திய நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்காக வனப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திடம் ஒரு ஏக்கர் காணி ரூபா 22,600 வருடாந்த வாடகை அடிப்படையில் பெற்றிருந்த போதிலும் முறையான முன் சாத்தியக்கூற்று ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாமல் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததனால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 74,772 இற்கான ஆரம்பச் செலவு பயனற்ற செலவு ஒன்றாகியிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற சொத்துக்கள்

கூட்டுத்தொகை ரூபா 15,514,918 இற்கான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஒரு வருடத்தை விட கூடிய காலம் முதல் விளைவற்ற நிலையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான சபையின் மதிப்பீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது மீண்டுவரும் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 21 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையான முரண்களும், மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 36 சதவீதம் முதல் 87 சதவீதம் வரை முரண்களும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்